முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1577

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.01.2024,** செவ்வாய்கிழமை

1. தர்மனே கலியின் சிறந்த தவசியே
தவத்தோடு உலகோர்க்கு தயவை காட்ட
தர்மனாய் அவதாரம் எடுத்த அரங்கனே
தக்கபடி உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் தை மாதம் 09 ம் நாள், 23.01.2024, செவ்வாய்கிழமை)
உரைத்திடுவேன் உலகோர் மேன்மை கருதி
மேன்மை கருதி வகைபட அரங்கன் உன் அவதாரமிருக்க
வையகத்தில் கலியிடரை வெல்லும் மகா சக்தி
3. சக்திதனை அரங்கன் நீ சர்வபலமாக
சற்குருவாய் ஏற்று வந்ததாலே
பக்திகொண்டு உலகோர் உன்வழி வந்தால்
பாருலகில் ஆற்றல்பெருகி அவரவரும்
4. அவரவரும் அரங்கன் நீ தேடுகின்ற
அறம் நிறைந்த ஞானத் தெளிவுகொண்ட
வரம் பெற்று உன்வழி இந்த வையகத்தில்
வளருகின்ற வாழுகின்ற ஞானிகளாக
5. ஆகவே உலகோர் தேற்றம் பெற்று
அரங்கன் உன்னால் கலியுகத்தை மாற்றும்
மாற்றுகின்ற மகா சக்தி பலம் பெறுவரப்பா
மரணத்தை வெல்லும் மகா யோகி நீ
6. மறுமையையும் அகற்றும் மா தவசி நீ
தவசி உன் வழியை ஏற்று
தரணியில் உலகோர் பின்தொடர்ந்தால்
அவதார ஞானி உன் வழியே அவரவரும்

7. ஞானிகளாக அகிலத்தை மாற்றும் ஞானவான்களாக
ஞான யுகம் படைத்து ஞானசித்தர் காலம் கண்டு
ஞான ஆட்சிதனை உலகில் நிறுவுவர்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—